# பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

1. அணிலு கீழ விழுந்துருச்சு.

   அணில் கீழே விழுந்துவிட்டது.

2. மேச மேல பை இருக்கு.

   மேசை மேல் பை இருக்கின்றது.

3. ஒங் கண்ணாடி எங்க?

   உன் கண்ணாடி எங்கே?

4. அவ ரொம்ப அழகா இருக்கா.

   அவள் மிகவும் அழகாய் இருக்கின்றாள்.

5. எனக்கு கிளியப் புடிக்கும்.

   எனக்கு கிளியைப் பிடிக்கும்.

6. அணில் எப்டி சாப்டும்?

   அணில் எப்படி சாப்பிடும்?

7. இன்னைக்கு மழ வரும் போலிருக்கே!

   இன்றைக்கு மழை வரும் போல் இருக்கின்றதே!

8. வித முளச்சி செடி வளந்துச்சு.

   விதை முளைத்து செடி வளர்ந்தது.

9. பாம்பால ஓசய கேட்க முடியாது.

   பாம்பினால் ஓசையை கேட்க முடியாது.

10. ஏட்ல எழுதாத பாடல் நாட்டுப்புறப்பாடல்.

    ஏட்டில் எழுதாத பாடல் நாட்டுப்புறப்பாடல்.